108—

கடம்பூர் மலைப்பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்

* **25264—**திருமதி அ.தி.சரஸ்வதி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடம்பூர் மலைப்பகுதியில் மெட்டல்வாடி, மாக்கம்பாளையம் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்:

"மெட்டல்வாடி மற்றும் மரக்கம்பாளையம் கிராமங்கள் மிகச்சிறிய கிராமங்களாகும். இங்கு கால்நடைகளின் எண்ணிக்கையும் மிகக்குறைவு. எனவே, கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை."

116—

கல்லுகாரன்பட்டியில் பால்வாடி அமைத்தல்

* **26411—**திரு.சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை யூனியன், கல்லுகாரன்பட்டியில் புதியதாக பால்வாடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]